# பா.ஜ.க. ஆட்சியின் தொல்லைகளையும் - கழக ஆட்சியின் சாதனைகளையும் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யுங்கள்!

## மகளிரணி – மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!



**சென்னை, மார்ச் 2-**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் தொல்லைகளையும், தமிழ்நாட்டின் கழக ஆட்சியின் சாதனைகளையும் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யுங்கள் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மகளிரணி -மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.**

**நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின், மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்களுடனான ஆலோசனை கூட்டம் (29.02.2024) வியாழக்கிழமை, சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கத்தில் நடந்தது. இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய, திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் நிர்வாகிகளுக்கு நினைவு பரிசு வழங்கினார்.**

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றியதாவது:-

“தேர்தல் பணிகள் எவ்வாறு செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். வீடு வீடாக சென்று திண்ணைப் பிரச்சாரம் செய்திட நிச்சயமாக நம்மால் முடிந்த அளவு மற்றவர்களால் செய்ய முடியாது. ஆனால் அதையும் தாண்டி, சின்ன கூட்டங்கள் உங்களுக்குத் தெரிந்த ஐம்பது பேர்களை அழைத்து மகளிர் அணி சார்பிலே தெருமுனைக் கூட்டங்களை நடத்துங்கள்.

நீங்கள் மேடைகளில் நன்றாக பேசுகிறீர்கள். பேசுவதற்காக வேறு யாரையும் வெளியில் இருந்து அழைக்க வேண்டாம். நமது நிர்வாகிகளில் சிறப்பாக கருத்துகளை வெளிப்படுத்துபவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள். ஏனென்றால் நமக்கு நாம்தான் வாய்ப்பு கொடுப்போம். நம்மில் பலர் பேசுவதை கேட்கும்போது ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அவ்வளவு தெளிவாக பேசுகிறீர்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து கூட்டங்களை நடத்தி கட்சியின் செய்திகளை பெண்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

அதை விட முக்கியமான விஷயம், பாஜக கைதேர்ந்த ஒரு திறமை வைத்திருக்கிறார்கள். அதுதான் பொய் பிரச்சாரம்., மேலே இருந்து கீழே வரை பிரமாதமாக இதை செய்வார்கள். நடக்கவே நடக்காத விஷயத்தை நடந்ததாக திரும்பத் திரும்ப வாட்ஸ் அப்பிலே சோஷியல் மீடியாவிலே பரப்பிவிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

**பா.ஜ.க.வின் பொய்ப் பிரசாரத்தை முறியடிப்பீர்!**

நேற்று கூட பிரதமர் பேசும்போது நம்மை விமர்சனம் செய்து பேசியிருக்கிறார். தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத்தை நாங்கதான் செய்திருக்கிறோம். யுபிஏ கூட்டணி அரசில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று பேசியிருக்கிறார். ஆனால் முதலில் இந்தத் திட்டத்தை அறிவித்தது 201213 பட்ஜெட்டில் அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான். 23 ஆயிரத்து 400 கோடி ரூபாய் இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் நம்மால் அதைத் தொடர முடியவில்லை.

பாஜக ஆட்சியின் முதல் பட்ஜெட்டில் நிதியமைச்சராக அருண் ஜேட்லி இருந்தபோது முதல் கட்டமாக 11 ஆயிரம் கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு பாஜகவின் முதல் ஐந்து வருட ஆட்சி முடிந்துவிட்டது. அதன் பின் மீண்டும் ஆட்சிக்கு வந்தார்கள். அடுத்த தேர்தலும் வரப் போகிறது. இந்த நிலையில்தான் இப்போது அந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. 7 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

அதனால் யார் ஸ்டிக்கர் ஒட்டுகிறார்கள், யார் அரசியல் செய்கிறார்கள், கொடுத்த வாக்குறுதியை யார் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்பதை நீங்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

வாக்குறுதி கொடுத்த எல்லா திட்டத்தையும் நிறைவேற்றிவிட்டோம் என்கிறார்கள். ஆனால் மதுரை எய்ம்சை இன்னும் கண்ணிலேயே காட்டவில்லை.

அதேபோல தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமான நைபர் திட்டம் கொண்டுவர வேண்டும் என்று ஃபைனான்ஸ் செகரட்டரியை நேரில் சந்தித்து வலியுறுத்தினேன். என் தொகுதிக்கான திட்டம் இல்லையென்றால் கூட வலியுறுத்தினேன். ஆனால் இன்னும் அது நடக்கவில்லை.

மேலும் என் தொகுதியில் சிப்பெட் கெஞ்சி கெஞ்சி கொண்டுவந்தோம். அதற்குண்டான நிதியை இன்னும் ஒதுக்கவில்லை. இப்படி உங்கள் பகுதியிலும் நிறைய இருக்கும்.

**பா.ஜ.க. ஆட்சியால் கண்ணீர் கதைகள்**

எல்லாருடைய அக்கவுண்டிலும் 15 லட்சம் போடுகிறோம் என்று சொன்னார்கள். வருடத்துக்கு இரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த வட மாநிலத் தொழிலாளர்கள் கூட கோவிட் ஊரடங்கு நேரத்தில் நடந்தே ஊர்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த கண்ணீர் கதைகளை நாம் பார்த்தோம். இப்படிப்பட்ட ஒரு ஆட்சிதான் நடந்திருக்கிறது.

இங்கே இருக்கிற பல பெண்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கலாம். இதுவும் அதுவும் அரசியலாக கலக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கோயிலுக்கு போவதோ, சர்ச்சுக்கு போவதோ, மசூதிக்கு போவதோ, கடவுளை நம்புவதோ நம்பாததோ உங்கள் தனிப்பட்ட விஷயம். அதில் வேறு யாரும் குறுக்கிடுவதற்கோ, கருத்து சொல்வதற்கோ அவசியம் இல்லை.

இது மூடநம்பிக்கையா, இது தேவையா, இது பெண்களை முடக்கக் கூடிய நம்பிக்கையா, இது சாதியை வலியுறுத்தும் நம்பிக்கையா என்பது போன்ற விவாதங்கள் இருக்க வேண்டும். ஆனால் அதையெல்லாம் தாண்டி கடவுளையே நான் தான் காப்பாற்றுகிறேன் என்று சொல்லிக் கொண்டு வரக் கூடியவர்களை நம்பக் கூடாது. இதை மற்ற பெண்களுக்கு, சகோதர சகோதரிகளுக்கு இதை எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமை.

பெரும்பான்மை மக்களை நாங்கள் தான் காப்பாற்றுகிறோம் என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு மாதம் ஆயிரம் உரிமைத் தொகையாக தருவது பிஜேபி அரசு அல்ல... நமது திமுக அரசு. பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட இந்து பெண்கள் படிக்க வேண்டும் என்று கல்லூரிகள் கட்டியதே நமது தலைவர் கலைஞர்தான். பெரும்பான்மை இந்து மக்கள் படிக்க இட ஒதுக்கீடு வேண்டும் என்று போராடியது திராவிட இயக்கமும் பெரியாரும். அதனால் பெரியாரும் இந்துக்களுக்கு எதிரானவர் இல்லை.

நாம் படிக்கக் கூடாது என்று சொல்கிறார்கள் அல்லவா... அவர்கள்தான் இந்துக்களுக்கு எதிரானவர்கள்... நாம் படிக்கக் கூடாது என்று நீட் கொண்டுவருகிறார்கள் அல்லவா... அவர்கள்தான் இந்துக்களுக்கு எதிரானவர்கள். நம் பிள்ளைகள் படிக்கக் கூடாது என்று புதிய கல்விக் கொள்கை கொண்டு வந்து எல்லாருக்கும் என்ட்ரன்ஸ் வைக்கப் போகிறேன் என்று சொல்கிறார்களே... அவர்கள்தான் எல்லா மதங்களையும் சார்ந்த எல்லா மக்களுக்கும் எதிரானவர்கள்.

இந்த நாட்டில் ஜிடிபி உயர்ந்துவிட்டது என்கிறார்கள். அதில் பணக்காரர்களின் வருமானம்தான் உயர்ந்திருக்கிறது. சாதாரண மக்களின் பொருளாதாரம் சறுக்கிக் கொண்டேதான் செல்கிறது.

விவசாயிகளின் போராட்டம் இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது. மணிப்பூர் பிரச்சினை இன்றுவரை ஓயவில்லை. அங்கே செல்வதற்கு பிரதமருக்கு இன்னும் நேரம் கிடைக்கவில்லை.

அதேபோல தமிழ்நாட்டில் சென்னையிலும் தென் மாவட்டத்திலும் மிகப்பெரிய மழை வெள்ளம் பாதிப்பு ஏற்பட்டது. ஒன்றிய அரசு இதுவரை ஒரு பைசா கூட தரவில்லை.

இந்தியாவிலேயே முதல் முறையாக, தமிழ்நாடு முதலமைச்சர் இந்த வெள்ளத்தில் இடிந்துபோன வீடுகளுக்கு 4 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு உதவிக்கரம்**

இதுபோல வேறு எந்த மாநில அரசும் செய்ததில்லை. விவசாயிகள், மீனவர்கள் என பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் உதவிக் கரம் நீட்டியது தமிழ்நாடு அரசு. ஆனால், ஒன்றிய அரசாங்கம் இதுவரை ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை.

நமது பட்ஜெட்டில் என்னென்ன திட்டங்களை சொல்லியிருக்கிறோம், எதை எதை செய்திருக்கிறோம்., எதை எதை செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மக்களை சந்தித்து நீங்கள் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

தொடர்ந்து திமுக இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்று ஒரு பிரசாரத்தை அவர்கள் செய்துகொண்டே இருக்கிறார்கள். திமுக யாருக்கும் எதிரியில்லை. எல்லாரும் வாழ வேண்டும் என்று நினைக்கக் கூடிய எல்லாருக்கும் எல்லாரும் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிற இயக்கம் திராவிட இயக்கம். இதை நாம் மக்களிடம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும். இதுதான் நமது தலையாய பணி.

இதேபோல சோஷியல் மீடியாக்களை அதிகமாக பயன்படுத்த வேண்டும். நம் வீட்டில் இருந்தபடியே இன்னொருவர் வீட்டுக்கு போய் செய்திகளை சொல்கிற வழி சோஷியல் மீடியா. அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சமூக தளங்களை அதிகமாக பயன்படுத்த வேண்டும்.

நாம் வீடுகளுக்கு செல்லும்போது அந்த வீட்டில் இருப்பவர்கள் அவர்களின் பிரச்சினையை சொல்லலாம். இந்த சர்டிபிகேட் வரலை, இந்த பகுதியில் இந்த பிரச்சினை இருக்கு லைட் எரியலை, தண்ணி வரலை என்று நம்மிடம் சொல்லலாம். அதை உடனடியாக நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், மக்கள் பிரதிநிதிகளிடம் சொல்லி அந்த பிரச்சினையை அப்போதே தீர்த்து வைக்க வேண்டும். இது அவர்களின் மனதில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**எதிர்காலத்தை தக்க வைக்கும் தேர்தல்**

எல்லாவற்றையும் விட தன்னம்பிக்கையோடு எங்களால் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று தேர்தல் களத்தில் நாம் பணியாற்ற வேண்டும். ஏனென்றால் இந்தத் தேர்தலில் நாம் பெறப் போவது அரசியல் வெற்றி மட்டு மல்ல,.... இத்தனை வருடங்களாக பெண்கள் பெற்றிருக்க கூடிய உரிமைகள், வாய்ப்புகள், இந்த நாட்டின் அமைதியான எதிர்காலத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான தேர்தல்.

மறுபடியும் இந்த ஆட்சி டெல்லியிலே உருவானால், முதலில் அடிபடுவது தமிழ்நாடு, பெண்களின் உரிமைகள், தமிழர்களின் உரிமைகள், நமது கல்விதான். சாதாரண மக்களுக்கான பொருளாதார வளர்ச்சியே இருக்காது.

இதை நீங்கள் புரிந்துகொண்டு மக்களுக்கும் புரியவைக்க வேண்டும். எங்கே போனாலும், கல்யாணத்துக்கு போனாலும், கடைக்கு போனாலும், பஸ்ஸில் போனாலும், வீட்டில் ஃப்ரியா இருந்தா பஸ் ஏறி போங்க, அதுவும் ஃப்ரீதானே... இப்படி எல்லா இடத்திலும் நம் பக்கத்தில் இருப்பவர்களிடம் பேசுங்கள்.

பாஜக ஆட்சி தொடர்ந்தால் என்ன ஆகும் என்பதை சொல்லுங்கள். நம்மால் எல்லா இடங்களிலும் பிரச்சாரம் செய்ய முடியும், நாற்பது தொகுதிகளிலும் வெற்றிபெற்று பிறந்தநாள் காணும் தளபதியின் கைகளில் பரிசாக ஒப்படைப்போம்” .

இவ்வாறு கனிமொழி எம்.பி. உரையாற்றினார்.

உடன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், மாநில மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி மாநில செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி, தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, மாநில சமூக வலைதள பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன், யாழினி, மகளிர் பிரச்சாரக்குழு செயலாளர்கள் ராணி ரவிச்சந்திரன், ஜெஸி பொன்ராணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்!

---

### உலகத் தமிழர்களையெல்லாம் ஒருங்கிணைத்த முதல்வரின் சாதனையை மறக்க முடியாது!

# சாதனைச் சரித்திரமே நீடூழி வாழ்க!

## ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா.செ.சந்திரகாசன் வாழ்த்துச் செய்தி!

*சென்னை, மார்ச் 2-*

*உலகத் தமிழர்களையெல்லாம் ஒருங்கிணைத்த உங்கள் சாதனையை மறக்க முடியாது என்றும் சாதனைகள் பல படைத்த சாதனைச் சரித்திரமே நீடூழி வாழ்க என்றும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா.செ.சந்Aதிரகாசன் அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள வாழ்த்து கழகத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*இது குறித்து சா.செ.சந்திரகாசன் அவர்களின் வாழ்த்து கடிதம் வருமாறு:*

*பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா, வணக்கம்,*



*உலகத்தமிழினத்தின் மாபெருந்தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக்காலமான இந்த ஆண்டு உலகத் தமிழர்களுக்கெல்லாம் உணர்வெழுச்சிக் காலமாகும். அதனால் இந்த ஆண்டின் உங்கள் பிறந்த நாள் உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளியேற்றும் திருநாள் என்றால் மிகையாகாது.*

*அயலகத் தமிழர்தினம் நடாத்தி, உலகத் தமிழர்களையெல்லாம் ஒருங்கிணைத்த உங்கள் சாதனையை மறக்க முடியாது. புலம்பெயர்ந்த எங்கள் ஈழத்தமிழ்ச் சகோதரர்களைக் கூட அதில் பங்கேற்கச் செய்து, தமிழ் உணர்வைக் காட்டிய உங்கள் இன உணர்வை உளமரப் போற்றுகிறோம்.*

*இந்தியாவில் ஏதிலிகளாகத் தஞ்சடைந்திருக்கும் எமது ஈழமக்களுக்கு, தாயினும் சாலப்பரிந்து தாங்கள் புரிந்து வரும் உதவிகள் சரித்திரம் படைப்பவையாகும்.*

*தந்தை செல்வா காலத்திலிருந்து எமது ஈழத்தமிழினம் உள்ளத்தாலும், உணர்வாலும் தமிழ்நாட்டின் உணர்வுகளுடன் இரண்டறக் கலந்தே உள்ளது. எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும் உங்களுடன் ஒன்றியே தொண்டறம் பேணி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.*

*எனவே, எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் சார்பிலும், இன்றும் இலங்கையில் தமிழறம் காத்துவரும் ஈழ மக்கள் சார்பிலும், புலம்பெயர்ந்த எம் ஈழ உடன்பிறப்புகள் சார்பிலும், தங்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். சாதனைச் சரித்திரமே நீடூழி வாழ்க!*

*இவ்வாறு சா.செ.சந்திரகாசன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*





கழகத் தலைவர் அவர்களின் 71ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு 188 அ வட்டத்தில் பகுதி துணைச் செயலாளர் மடிப்பாக்கம் சே.சிந்தன் ஏற்பாட்டில் 1000 பேருக்கு பிரியாணியை பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் சமீனா செல்வம், வட்ட கழக செயலாளர் ரஞ்சித்குமார், மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் பி.சக்திவேல், டி.தேவா, பி.வேலு ,ரகு ஜான், முருகன், ரமேஷ், அருண் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

---

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி வகுப்பறை சீரமைப்பு-இலவச சீருடைகள்!

*சென்னை, மார்ச 2-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி வகுப்பறைகள் சீரமைக்கப்பட்டு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.*

*மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வார்டு வட பெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ளது அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி, இந்த பள்ளியில் உள்ள வகுப்பறைகளில் படம் பார்த்து துவக்கப்பள்ளி மாணவர்கள் பாடம் கற்பிக்கும் வகையில் சுவர்களை சுத்தம் செய்து, வர்ணம் பூசி படங்கள் வரைந்து தர வேண்டும் என்று, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரும், ஆசிரியர்களும் திமுகவினரிடம் கோரிக்கை வைத்தனர்.*

*இந்த கோரிக்கையின் அடிப்படையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மேற்படி பள்ளியில் உள்ள இரண்டு அறைகளில் வர்ணம் பூசி தகுதியான படம் வரைவுயும் ஆசிரியரை கொண்டு படம் வரையும் பணி துவங்கப்பட்டு,என் கணிதம், உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, தேசிய தலைவர்களின் படங்கள், தேசிய விலங்குகள், பறவைகள் போக்குவரத்து விதிமுறைகள் உள்ளிட்ட அனைத்தையும் சுவரில் வண்ண ஓவியங்களாக வரைந்தனர்.*

*பின்னர் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஒரு செட்டு சீருடை மற்றும் காலணி சாக்ஸ் ஆகியவற்றையும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வாங்கித் தந்தார்.*

*மேற்படி வகுப்பறைகளை தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு,மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் பள்ளியில் படிக்கும் மாணவிகளே . வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் சி. மூர்த்தி, எஸ். சிவகுமார், சதீஷ்குமார், எஸ். பாலாஜி எம் ஜான்சன் பூபாலன், விஜயன், சுதர்சன் ,மைக்கேல், செந்தில், ஆகியோர் முன்னிலையில் மாணவர்கள் இன்று பாடம் படிக்கும் பள்ளியின் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவ மாணவிகள் மீது பூக்கள் தூவி தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.*

*அரசு ஆதிராவிட துவக்கப் பள்ளியை முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு சுத்தப்படுத்தி கொடுத்த திமுகவினருக்கு பகுதி மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி திமுக செயலாளர் புழல் எம், நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 17வது வட்டம் வடபெரும்பாக்கம் சின்ன தோப்பு பகுதி அமைந்துள்ள அரசு ஆதிதிராவிட நலத்துறை பள்ளியின் வகுப்பறைகளில் ஓவியங்கள் வரையபப்பட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. வட்டச் செயலாளர் கே. கருணாகரன் சி மூர்த்தி ஜி. முனிவேல் சதீஷ்குமார் எஸ். சிவகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*

---

### சென்னை வட கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் - முதியோர்களுக்கு அறுசுவை உணவு!

## வை.ம.அருள்தாசன் தலைமை! லயன் வீ.தியாகராஜன் ஏற்பாட்டில்!

*சென்னை, மார்ச் 2-*

*சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் பிறந்தநாளையொட்டி சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி சென்னை வட கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.மா அருள்தாசன் தலைமையில் திருவொற்றியூர் விம்கோ நகரில் உள்ள ரெகோபோத் முதியோர் இல்லத்தில் அங்கு வசிக்கும் முதியவர்களின் பிரார்த்தனையுடன் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப் பட்டது.*

*மேலும் அங்குள்ளவர்களுக்கு சேலை, லுங்கி மற்றும் முதியோர் இல்லத்திற்கு தேவையான அரிசி உள்ளிட்டவை வழங்கி அங்கு வசிப்பவர்களுக்கு அறுசுவை அசைவ உணவும் வழங்கப்பட்டது.*

*இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி மூன்றாவது வட்ட அவைத் தலைவர் வி.கே.ஏழுமலை, முன்னாள் கவுன்சிலர் எஸ். இளங்கோ, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.சுரேஷ்குமார், விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.பரசுராமன், மீனவர் அணி மாவட்ட தலைவர் ஆர். நவக்குமார், விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை.மா. கண்ணதாசன், மாவட்ட பிரதிநிதி ராம்குமார், மூன்றாவது (அ) வட்ட பிரதிநிதி கார்த்திக், திருவொற்றியூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி எஸ் .ராஜேஷ் , மூன்றாவது வட்ட பொருளாளர் எம்.ராஜா, எஸ்.மகேஷ்குமார், பி. மணி மற்றும் வர்த்தக அணி நிர்வாகிகள் உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி வகுப்பறைகள் சீரமைக்கப்பட்டு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.